கல்வெட்டில் பாசன செய்திகள்



TNSDA
11380

தானம் அறக்கட்டளை
மதுரை

கல்வெட்டில் பாசனச் செய்திகள்

தானம் அறக்கட்டளை

மதுரை

கல்வெட்டில் பாசனச் செய்திகள்

முதல் வெளியீடு - தை, 2004 (சுபானு ஆண்டு 2034)

11380

வெளியீடு

தானம் அறக்கட்டளை

18, பிள்ளையார் கோவில் தெரு,

சோமசுந்தரம் காலனி, மதுரை – 625 010

தொலைபேசி: 0452-2610794, 2610805

தொலைநகல்: 0452 – 2602247

மின் அஞ்சல்: dhan@md3.vsnl.net.in

கல்வெட்டில் பாசனச் செய்திகள்

பொருளடக்கம்

1. **பாசனக் கட்டுமானங்கள்**

பாண்டியர் கால மடைக் கல்வெட்டுகள் ---------- 1

புதுக்கோட்டைப் பகுதியில் ஏரிபாசனம் ---------- 7

பராந்தக சோழன் காலத்துக் கலிங்கு ---------- 11

மடை அமைப்பில் பண்டைய தொழில்நுட்பம் ---------- 13

ஏரி உருவாக்குவது பரம்பரைத் தொழிலா? ---------- 15

2. **பராமரிப்பும் நிர்வாகமும்**

ஒன்பதாம் நூற்றாண்டில் ஏரிப் பராமரிப்பு ---------- 17

ஏரிகளைக் காப்போம் ---------- 20

ஏரிகளின் நிர்வாகம்: உத்திரமேரூர் ---------- 23

சலவைத் தொழிலாளியும் ஏரியும் ---------- 25

பாசனச் சட்டங்கள் ---------- 27

பாசன நீர்ப்பங்கீடு: கிராமசபையின் ஆணை ---------- 28

கிணறுகள் (Conjunctive Use) ---------- 29

அணிந்துரை

உலகிலுள்ள பல்வேறு இனங்களெல்லாம் நாடோடிகளாய்த் திரிந்தபொழுதே, சிறந்த நாகரிகத்தை உருவாக்கி, பெருமைக்குரிய சமூகத்தைக் கட்டமைத்தவர்கள் தென்னிந்தியர்கள்.

திரை இரும் பனிப்பௌவம் செவ்விதா அற முகந்து
உர உரும் உடன்று ஆர்ப்ப ஊர் பொறை கொள்ளாது
கரை உடை குளமெனக் கழன்று வான் வயிறு அழிபு
வரை வரை தொடுத்த வயங்கு வெள்ளருவி

என்று மையோடக்கோவனாரால் பாடப்பெற்ற இப்பழம்பாடல், வான் தந்த மழை நீரை முறையாகச் சேமிக்கும் இயல்பினைக்கூறுகிறது. சங்ககாலப் பாடல்கள் பலவற்றில் இதுபோன்ற நுட்பமான பாடல்களைக் காணலாம். இது தமிழர்கள் அந்தக் காலத்தில் பாசனத்தில் எவ்வளவு சிறந்திருந்தார்கள் என்பதற்கு ஒப்பற்ற சான்று.

சங்கம் அமைத்தும், இலக்கியம் வளர்த்தும் வாழ்ந்த இந்த தொன்மைக்குடி, மழையால் கிடைக்கின்ற நீரைச் சேமிக்கும் உயர்ந்த பண்பையும் உலகிற்கே கற்றுக் கொடுத்தது எனின் அது சற்றும் மிகையன்று. இரண்டு இலட்சம் கண்மாய்களையும், ஏரிகளையும் அதற்கும் மேற்பட்ட குளங்களையும் கொண்டுள்ள தற்போதைய தென்னிந்தியாவே இதற்குத் தக்க சான்று.

தற்போதுள்ள கண்மாய்களும், ஏரிகளும் தனக்குள் ஒப்பற்ற செய்திகளைப் புதைத்துக் கொண்டுள்ளது. தொன்மையான, ஆனால் இன்றைக்கும் என்றைக்கும் பயன்தரக்கூடிய நீர் சேமிப்புத் தொழில் நுட்பங்கள், பாசனச் செய்திகள், கொடையாக வழங்கியவரைப் பற்றிய குறிப்புகள் போன்றவை கல்வெட்டுகளாய் நின்று தகவல் பரப்பிக் கொண்டிருக்கின்றன. விரிவாக்குகிறோம், தூர்வாருகிறோம் என்று சொல்லி இவ்வற்புதத் தகவல் பெட்டகத்தைச் சிதைத்துக் கொண்டிருப்பவர்களும் நாம்தான். நமக்கு அடுத்து வருகின்ற சந்ததியினருக்கு நமது முன்னோர்களின் தொழில் நுட்பங்களைச் சொல்ல வேண்டியது நமது கடமையன்றோ? நம் முன்னோர்களின் பாசன நுட்பங்களை அறிந்து கொண்டு, அவற்றை முறையாய்ப் பதிவு செய்வதும் நமது பொறுப்பன்றோ? கல்வெட்டுகளில் கண்டறிந்த எழுத்துகளை மட்டுமே பதிவு செய்யாமல், அவற்றிலுள்ள செய்திகளை அனைவரும் அறியும் வண்ணம் தொகுத்தளிக்கின்ற முயற்சியாகத்தான் இந்நூலை தானம் அறக்கட்டளை வெளியிடுகிறது. நீர்நிலை சார்ந்த வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துக் களப்பணியாளர்களுக்கும் இந்நூல் மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

ஆ. குருநாதன்
திட்டத் தலைவர்

பாண்டியர் கால மடைக் கல்வெட்டுகள்

முனைவர் வெ. வேதாசலம்

தமிழ்நாட்டின் தென்பகுதியை ஆண்ட பாண்டிய மன்னர்கள் சங்க காலத்திலிருந்தே பாசனக் குளங்களைத் தோற்றுவித்துள்ளனர். குளக்கீழ் விளைந்த நெல்லைத் தென்னவன் நாட்டு மக்கள் உணவாகக் கொண்டனர் என்பதைச் சங்க இலக்கியம் அந்நாட்டின் சிறப்புகளில் ஒன்றாகக் கூறுகிறது. [1] இதனால் பாண்டிய நாட்டில் உள்ள பாசனக்குளங்கள் சில கி.பி. 300 க்கு முன்பாகச் சங்ககாலப் பாண்டிய அரசர்களால் உருவாக்கப்பட்டுவிட்டன எனலாம். கி.பி. 600க்கும் 985க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சிபுரிந்த முற்காலப் பாண்டியர்களும் தாங்கள் வெளியிட்ட செப்பேடுகளில் பூதங்களின் துணைகொண்டு பெரிய ஏரிகளைத் தோற்றுவித்ததாகப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர். [2] இவர்கள் காலத்தில் பாண்டிய நாட்டு உட்புறமிருந்த சிறுநாட்டுப் பிரிவுகளின் நிர்வாகத்தினை மேற்கொண்ட நாடுகிழவர்களும் பல ஏரிகளைத் தோற்றுவிக்கும் பணியோடு பழைய ஏரிகளைப் புதுப்பிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். இதனைத் தெரிவிக்கும் முற்காலப் பாண்டியர் காலத்து வட்டெழுத்து, மற்றும் தமிழ்க்கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. இப்பாசன ஏரிகளிலுள்ள பழமையான மடைகளின் அழிவு பற்றியும், புதியதாகக் கண்டறியப்பட்ட சில பாசன மடைக் கல்வெட்டுகள் குறித்தும், இக்கட்டுரை ஆய்வு செல்கிறது.

மடைகளின் அழிவு

பாசனப் பணிகள் குறித்த பழமையான கல்வெட்டுகளுடன் கூடிய மடைகள் தற்போது அழிவுக்குள்ளாகி வருவது வரலாற்றுலகத்திற்கு வருந்தத்தக்க செய்தியாகும். வைகைக் கரையில் நின்றசீர் நெடுமாறன் எடுப்பித்த நீர்மதகு அழிவுக்குள்ளாகியது. அதில் பொறிக்கப்பட்டிருந்த அவனது வட்டெழுத்துக் கல்வெட்டுக் கற்பலகை, துணி துவைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கல்லாக மாறிய நிலையில் மீட்கப்பட்டுத் தற்போது அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இருப்பைக்குடிக் கிழவன் என்றழைக்கப்பட்ட இருஞ்சோணாட்டு (சாத்தூர்வட்டம்) தலைவனின் பாசனப் பணிகள் அவனது நீர்ப்பாசன முறைகள் பற்றித் தெரிவிக்கும் பழமையான நீண்டபாடல் கல்வெட்டும், இருக்கண்குடி (இருப்பைக்குடி)க் கண்மாயில் இருந்த அவனது மடைக்கல்வெட்டும் தற்போது முற்றிலும் அழிவுக்குள்ளாகி மறைந்தேவிட்டன. [3] இவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் (கி.பி.815-862) கல்வெட்டுகளாகும். சாத்தூரில் நெடுமாறனால் தோற்றுவிக்கப்பட்டு இருப்பைக்குடிக்கிழவனால் பழுதுபார்க்கப்பட்டதைத் தெரிவிக்கும் பாசனக் கல்வெட்டும், நென்மேனியிலுள்ள ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் கல்வெட்டும் அங்குள்ள மடைகள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் வேறு இடங்களுக்கு எடுத்துச்

செல்லப்பட்டுவிட்டன. திண்டுக்கல் மாவட்டம் இராமநாதபுரம் என்ற ஊரில் பள்ளிநாட்டு வேளாண்களால் இரண்டாம் வரகுணன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட ஏரியில் இருந்த மடையும் அழிவுக்குள்ளாகி அதனருகில் இருந்த பாறையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மட்டும் தற்போது எஞ்சியுள்ளது [4]

தற்காலத்து நாகரிகம் மற்றும் அறிவுவளர்ச்சியில் அழிவுக்குள்ளாகும் பண்டைய பாசனக் குளங்களிலுள்ள மடைகளையும் அவற்றிலுள்ள கல்வெட்டுகளையும் காப்பது இன்றைய அவசரத் தேவையாகும். பழங்கால பாசன முறைமையைத் தெரிவிக்கும் அரிய சான்றுகள் இவையாகும். பண்டைய குளங்களை நவீனப்படுத்தும் நோக்கில் விரிவுபடுத்தும்போது பழைய மடைகள் அழிவுக்கு ஆளாகின்றன. தற்போது புதியனவாக அமைக்கப்படும் பாசன மடைகள் பல நூற்றாண்டுகள் இடைவெளியில் தற்போது விரிவுபடுத்தப்படும் அக்குளங்களின் கரையின் மீதே அமைக்கப்படுகின்றன. அவ்வாறு அமைக்கும்போது மடையுடன் இணைந்த பழமையான நீர் செல்லும் தூம்புகளும் சிதைக்கப்படுகின்றன. புதிய கலிங்குகள், மடைகள் கட்டுவதற்கும் கோயில் போன்ற கட்டடங்கள் கட்டுவதற்கும் பழைய மடைக்கற்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே இது தொடர்பாக இவ்வழிவைத் தடுக்கும் நோக்கில் தமிழ்நாட்டிலுள்ள பழமையான பாசனக் குளங்களின் பட்டியல் ஒன்று தயார் செய்து மாவட்ட நிர்வாகத்திற்கும் பொதுப் பணித்துறைக்கும் அனுப்பலாம். பழமையான குளங்களின் வரலாற்றுச் சிறப்புடன், அவற்றைச் சிதைக்கக்கூடாது என்ற எச்சரிக்கையோடு கூடிய அறிவிப்புப் பலகைகளை அவற்றின் கரையில் நட்டு வைக்கலாம். இதன் மூலம் நமது பண்டைய பொருளியல் பாசன வளர்ச்சியைத் தெரிவிக்கும் கல்வெட்டுகளைப் பாதுகாத்து, பாசனமுறை குறித்த பண்டைய நாகரீகம், பாரம்பரியம், பெருமை ஆகியவற்றிற்கு நேரும் அழிவையும் தடுத்து நிறுத்தலாம்.

நத்தம் கண்மாய்க் கல்வெட்டு

நத்தம், மதுரைக்கு வடக்கே முப்பத்தாறு கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. இவ்வூரின் தென்புறத்தில் தெற்கு வடக்காகக் கரையினைக் கொண்ட பழமையான கண்மாய் ஒன்று உள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தில் துவராபதிநாடு என்று அழைக்கப்பட்ட இப்பகுதியின் நாட்டுத் தலைவர்களாக விளங்கிய துவராபதிவேளான்களில் ஒருவன் இதனை உருவாக்கியுள்ளான். இக்கண்மாயின் தென்கோடியில் ஏணி வடிவில் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கல்மடையின் குறுக்குக் கல்லில் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டு இதனை உருவாக்கியவனின் பெயரைத் தெரிவிக்கிறது. கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியை இது சார்ந்தது. இக்கல்வெட்டு தென்னவன் துவராபதிவேளான் என்ற துவராபதி நாட்டின் தலைவன் நத்தத்திலுள்ள பெருங்குளத்தையும் அதன் மடைகளையும் செய்வித்தான் என்று கூறுகிறது. [5]

துவராபதிநாடு என்பது இன்றைய நத்தம் வட்டத்தின் பெரும் பகுதியை அக்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது. இந்நாட்டின் தலைவர்களாக விளங்கிய துவராபதி வேளான்கள் குறித்த கல்வெட்டுகள் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு முடியப் பாண்டிய நாட்டில் கிடைக்கின்றன. துவராபதிநாட்டின் குடித் தலைவர்களாக விளங்கிய இவர்கள் காலப்போக்கில் தங்களது ஆளுமையைப் படிப்படியாக இழந்து பாண்டிய அரசின் அலுவலர்களாக மாறி வரலாற்று வெள்ளத்தில் மறைந்து போனார்கள். பாண்டிய நாட்டில் இதுபோன்ற நாட்டுத் தலைவர்களாக விளங்கியவர்களே முற்காலப் பாண்டியர் காலத்தில் உள்நாட்டு அமைப்பின் தலைவர்களாக இருந்தார்கள். அரசுக்கு வேண்டிய போது படையுதவி செய்து பாண்டிய அரசர்களுடன் வெளிநாட்டுப் படையெடுப்பில் கலந்து கொண்டார்கள். பாண்டிய நாட்டின் புறப்பகுதிகளில் இருந்த இவர்கள் அவர்களுக்குரிய நாடுகளில் பாசனக் குளங்களைத் தோற்றுவித்து அவற்றிற்குப் பொறுப்பாகவும் இருந்துள்ளார்கள்.

உறப்பனூர்க் கண்மாய்க் கல்வெட்டு

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்திலுள்ளது உறப்பனூர் கிராமம். திருமங்கலத்திலிருந்து செக்காணூரனி செல்லும் வழியில் இது அமைந்துள்ளது. இக்கிராமத்தினையொட்டி முற்காலப் பாண்டியர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட மிகப்பெரிய ஏரியொன்று உள்ளது. இது சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசனத்தைத் தரும் பரப்புடையது. இதனையடுத்துள்ள ஒன்பது கண்மாய்களுக்கு இதன் மூலமாக நீர்செல்கிறது. இதன் உள்வாய்ப் பகுதியில் ஏணிபோன்ற வடிவில் கல்லால் கட்டப்பட்ட பல கல்மடைகள் உள்ளன. இவற்றில் நடுவில் அமைந்த கல்மடையில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியைச் சார்ந்த எழுத்தமைதியில் தமிழ், கிரந்தம் கலந்த எழுத்துகளில் இரு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. [6] செங்குத்தாக நிற்கும் நடுமடைத் தூண் ஒன்றில் ***ஸ்ரீ வீரநாரயணன்*** என்றும் மற்றொரு தூணில் ***ஸ்ரீ கரிவரமல்லன்*** என்றும் முற்காலப் பாண்டியர்க்குரிய பெயர்கள் காணப்படுகின்றன. கரிவரமல்லன் என்று பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டு வாசகத்தின் மேற்புறம் இருசாமரங்களுக்கு நடுவே கொற்றக்குடையின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கீழ்ப்புறம் இரு குத்துவிளக்குகளின் நடுவே பூரண கும்பத்தின் உருவம் காணப்படுகிறது.

கல்வெட்டு குறிப்பிடும் 'வீரநாராயணன்' என்ற பெயர் தளவாய்புரம் செப்பேட்டை வெளியிட்ட பராந்தகவீரநாராயணனுக்குரிய (கி. பி. 866-911) பெயராகும். முற்காலப் பாண்டிய மன்னர்களில் இப்பெயரினைப் பெற்றவன் இவன் ஒருவனே ஆவான். இவனுக்கு, யானை போன்ற வல்லமை படைத்தவன் என்ற பொருளில் 'கரிவரமல்லன்' என்ற பெயர் இருந்திருப்பதை உறப்பனூர் மடைக்கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

உறப்பனூர்க் கண்மாயின் கலிங்கில் அவ்வூரிலிருந்து அழிந்துபோன கோயிலுக்குரிய முதல் இராசராச சோழனின் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது, [7] இது அம்மன்னனுக்குரிய 'திருமகள்' போல என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இதில் உறப்பனூர் கிராமம் 'நாட்டாற்றுப்புறத்து உறப்பனூர்' என்று குறிப்பிடப்படுகிறது. 'நாட்டாற்றுப்புறம்' என்பது வைகையாற்றிலிருந்து மதுரையைச் சாார்ந்த மாடக்குளம் என்ற பாசன ஏரிக்கு நீரைக் கொண்டு செல்லும் ஆற்றுக்கால் பகுதியினையொட்டி அமைந்த நிலப்பரப்பைக் குறிக்கும் உள்நாட்டு நிலப்பிரிவாகும். இந்நாட்டுப் பிரிவு முற்காலப் பாண்டியர் காலத்திலிருந்தே வழக்கில் இருந்து வந்துள்ளது. உறப்பனூரிலிருந்து செக்கானூரணியை அடைந்து அங்கிருந்து மதுரையை நோக்கிச் செல்லும் பெருவழியில் நாகமலைப் புதுக்கோட்டைக்கு அருகில் இப்பழமையான பாசனக்கால் பெருவழியைக் கடந்து மாடக்குளம் நோக்கிச் செல்கிறது. இக்காலுக்கு மேற்கே மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள கொங்கர் புளியங்குளமும் 'நாட்டாற்றுப்புறம்' என்ற உள்நாட்டுப்பிரிவில் இருந்துள்ளது. இதனை இப்பகுதியிலுள்ள பராந்தக வீரநாராயணனின் சமணமலைக் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. (நாட்டாற்றுப்புறத்து புளிங்குன்றூர்). தென்பரங்குன்றத்திலுள்ள முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு இதனை புளிங்குன்றூரான சுந்தரபாண்டியபுரம் என்று குறிப்பிடுகிறது [8] இதனால் நாட்டாற்றுப்புறம் என்ற பழைய நாட்டுப் பிரிவின் பெயர்வழக்கு நீக்கப்பட்டு இப்பகுதி 'வீரநாராயணக் குளக்கீழ்' என்று பராந்தகவீரநாராயணனின் பெயரில் அமைந்த நாட்டுப் பிரிவாக மாற்றி அழைக்கப்படலாயிற்று எனத் தெரிகிறது.

குளக்கீழ் என்ற பின்னொட்டைப் பெற்ற நாட்டுப்பிரிவுகள் பாண்டிய நாட்டில் பல இடங்களில் இருந்துள்ளன. உறப்பனூர்க் கண்மாய்க் கல்வெட்டு மூலம் 'வீரநாராயணக்குளம்' என்பது உறப்பனூர்க் கண்மாய்க்குரிய பெயராக இருந்திருக்க வேண்டும் என்று கூறலாம். பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு அவ்வேரியைச் சார்ந்து வாழ்ந்த வேளாண் சமூகக் குடியிருப்புகள் 'வீரநாராயணக் குளக்கீழ்' என்ற நாட்டுப்பிரிவில் அடக்கப்பட்டிருக்க வேண்டும்.

திருநெல்வேலிப் பகுதியில் தாமிரபரணியாற்றினையொட்டி நாட்டார் செல்வாக்குள்ள ஊர்களில் பல அரசியல் பொருளாதார மாற்றங்களைச் செய்து அவற்றிற்கு வளநாடுகள் என்று முற்காலப்பாண்டியர்கள் பெயரிட்டுள்ளனர். [9] (எ.கா. : திருவழுதிவளநாடு, ஸ்ரீவல்லபவளநாடு, பராந்தக வளநாடு, அமிதகுணவளநாடு) ஆற்றுக்கால்கள் பாயும் நிலப்பரப்பில் இத்தகைய நடவடிக்கையை - அப்பகுதியில் இருந்த வேளாண் சமூக நாட்டார் நடவடிக்கையைக் - கட்டுபடுத்தி அங்கிருந்த உள் நாடுகளிடையே அரசனது மேலாண்மையைச் செலுத்தும் முறையில் இம்மாற்றங்களைப் பாண்டியர்கள் செய்துள்ளனர். தாமிரபரணியின் இருகரைகளிலும்

நாட்டார்க்குரியதாக இருந்த வளமான வேளாண்சமூக ஊர்களைப் பிரமதேயமாக மாற்றி அவற்றைத் தங்களது நேரடி நிர்வாகத்தின் கீழே கொண்டு வந்தனர். பிரமதேய ஊரமைப்பு மூலமாகப் புதிய பாசன அமைப்புமுறையை உருவாக்கினர்.

இதுபோன்ற நடவடிக்கைகள் வைகையாற்றுக் கரைப்போக்கிலும் முற்காலப்பாண்டியர் காலத்தில் எடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் தாமிரபரணி போன்று நேடியாக ஆற்றுக்கால் மூலமாக வேளாண்மை நடைபெறவில்லை. ஆனால் ஆற்றின் கரையையொட்டி இருமருங்கிலும் பெரிய பாசனக்குளங்களைத் தோற்றுவித்து அவற்றின் மூலமாக வேளாண்மையைச் செய்தனர். இவற்றிற்குரிய நீர் வைகையாற்றிலிருந்து ஆற்றுக்கால் வெட்டப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டது. இப்பணியை அரசனும் அதிகாரிகளும் செய்துள்ளனர். (தொடக்கத்தில் இதனை நாட்டார்கள் செய்துள்ளனர்) திருப்புவனம் கண்மாய் இரண்டாம் இராசசிம்மனால் இராசசிங்ககுளம் என்ற பெயரில் பெரிய அளவில் உருவாக்கப்பட்டதைச் சின்னமனூர்ப் பெரியசெப்பேடு தெரிவிக்கிறது. [10] அதுமுதல் அவ்வேரியின் பாசனத்தின் கீழ் அமைந்த ஊர்கள் 'இராசசிங்கக் குளக்கீழ்' என்ற நாட்டுப்பிரிவில் இருந்த ஊர்களாகப் பாண்டியர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. குளக்கீழ் என்ற பெயரில் அமைந்த நாடுகள் பல வைகைக்கரையில் இருந்தன. [11] (எ.கா.: மாடக்குளக்கீழ், வேலூர்க் குளக்கீழ், மணலூர்க்குளக்கீழ், குன்றத்தூர்க் குளக்கீழ், ஆழகிய பாண்டியக் குளக்கீழ்) இக்குளக்கீழ் என்ற நாடுகளின் பெயர்களும் காலப்போக்கில் மன்னன் பெயரால் மாற்றப்பட்டன. பாண்டிய அரசின் ஆதிக்கத்தை வேளாண் சமூக நாடுகளிடையே ஏற்படுத்தும் வகையில் இம்மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். அம்முறையிலேயே உறப்பனூர்ப் பாசனஏரியும், வீரநாராயணக் குளக்கீழ் நாடாக மாறியிருக்க வேண்டும்.

முற்காலப் பாண்டிய மன்னர்கள் பண்டைய பாசனக்குளங்களைப் புதுப்பித்தல், புதிய ஏரிகளைத் தோற்றுவித்தல் மூலமாகப் பண்டைய வேளாண்சமூக நாட்டு நிர்வாகத்தின் கீழிருந்த பாசனக்குளங்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அவற்றின் மீது தங்களுக்கிருந்த உரிமையைப் படிப்படியாக நிலைநாட்டினர். இதன் மூலம் அக்குளங்களின் பாசனத்தின் கீழிருந்த ஊர்களும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. முற்காலப் பாண்டியர் காலத்தில் இருந்த நாட்டார் மற்றும் நாடுகிழவர் ஆதிக்கத்தில் இருந்த நாட்டு நிர்வாகப் பகுதிகளைப் படிப்படியே பல உத்திகளைக் கையாண்டு தங்களது நிர்வாகத்தின் கீழே பாண்டியர் கொண்டுவந்தனர் என்பதனை இது காட்டுகிறது.

திருப்பரங்குன்றத்திற்குத் தெற்கேயுள்ள நிலையூர் பாசனஏரியும், பராந்தக வீரநாராயணனின் பெயரினைப் பெற்றுள்ளதை அங்குள்ள அவன் கால மடைக்கல்வெட்டு ஒன்று உணர்த்துகிறது. [12] அதனைத் தொடர்ந்து இக்குளத்தின் பாசனத்தின்கீழ் அமைந்த ஊர்ப்பகுதிகள் 'வீர நாராயண

வளநாடு' என்ற பெயரில் அமைந்த நாட்டுப்பிரிவில் வந்தன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மேற்கண்ட மடைக்கல்வெட்டுகளின் ஆய்வு முற்காலப்பாண்டிய அரசு எவ்வாறு படிப்படியாக உள்நாட்டுப் பகுதியில் பாசனத்தின் மூலம் வேளாண்மையை ஏற்படுத்தி அதனை மைய அரசின் கட்டுக்குள் கொண்டு வந்தது என்பதைக் காட்டுகிறது. மேலும் செங்களால் கோயில்களைக் கற்றளியாக மாற்றியது போன்று, முற்காலப் பாண்டியர் காலத்திலேயே தொன்றுதொட்டுச் செங்கல்லால் கட்டப்பட்ட பாசனமடைகள் சுருங்கல்லால் கட்டப்பட்டன. இதனால் மடைகள் எளிதில் அழிந்து போகாமல் நிலைத்த தன்மையுடன் அக்கால பாசனமுறைக்குப் புதிய உத்வேகத்தையும் தந்தன என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

அடிக்குறிப்பு

1. புறநானூறு பா. 33.
2. பாண்டியர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை (1967) பக். 154
3. வெ. வேதாசலம், "இருப்பைக் குடிக்கிழவன்" தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு, தென்னிந்திய வரலாற்றுப் பேரவை.
4. SII. Vol. XIIV. No. 26
5. இக்கல்வெட்டினைப் பேராசிரியர் எ.சுப்பராயலு, தொல்லியல்துறைக் கல்வெட்டாய்வாளர் சு.இராசகோபால் இணைந்து கண்டறிந்தனர்.
6. இக்கல்வெட்டினைப் பனையூர் கரு. இராஜேந்திரன் கண்டறிந்து தெரிவித்தார். அதன் பின்னர் இது தொடர்பாகக் களஆய்வு செய்யப்பட்டது.
7. இக்கல்வெட்டு தொடர்பாகத் தகவல் தந்தவர் திரு. செல்வக்குமார் ஆவார்.
8. SII. Vol. IV. No. 372
9. SII. Vol. XIV. Nos. 16 A
10. பாண்டியர் செப்பேடு பத்து, பக். 157
11. வெ.வேதாசலம், 'குளக்கீழ்' தொல்லியல் ஆய்வுத் தொகுதி, தொல் பொருள் தொழில்நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம், மதுரை, (1985) பக். 278 - 291.
12. ARE 223 / 1941

புதுக்கோட்டைப் பகுதியில் ஏரிபாசனம்

கி. இரா. சங்கரன்

வரலாற்றுக் காலப் புதுக்கோட்டைப் பகுதியில் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்ட நீர்நிலைகளை ஏரி, குளம், குழி, குண்டு, பள்ளம் போன்ற பெயர்களில் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஏரி, குளம் என்ற சொற்கள் பெரும்பாலும் பருவகால மழைநீரை நெடுநாட்கள் தேக்கி வைத்திருக்கும் நீர்நிலைகளையே குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குளம் என்ற சொல் பின்னொட்டாக ஏரி என்ற சொல்லுடன் சேர்ந்து 'ஏரிக்குளம்' என்ற ஒரு தொடர்ச்சொல்லைக் கல்வெட்டு தருகிறது. (அட்டவணை பார்க்க). அதேபோன்று குளம் முன்னொட்டாக வாரி, வாய், வாத்தலை, பரப்பு, கால் போன்ற பெயர்ச்சொல்லுடன் ஒட்டி வந்து சில சிறப்பான குளப்பகுதிகளைக் குறிக்கின்ற குளவாரி, குளவாய், குளவாத்தலை, குளப்பரப்பு, குளக்கால் போன்ற கூட்டுச் சொற்களைத் தருகின்றன.

கீழ்க்காணும் வகையில் அந்தக் கூட்டுச் சொற்கள் பிரித்தாயப்படுமானால், முக்கிய குளப்பகுதிகளை இனங்காண முடியும்.

குளவாரி	= குளம் + வாரி	(குளத்திற்கு நீர் கொண்டுவரும் வாய்க்கால்)
குளவாய்	= குளம் + வாய்	(குளத்திற்கு நீர் கொண்டுவரும் வாய்க்கால்)
குளக்கால்	= குளம் + கால்	(குளத்திற்கு நீர் கொண்டுவரும் வாய்க்கால்)
குளப்பரப்பு	= குளம் + பரப்பு	(குளத்தில் நீர் நிற்கின்ற நிலப்பரப்பு)
குளவாத்தலை	= குளம் + வாத்தலை	(குளத்திற்கு நீர் கொண்டு வருகின்ற வாய்க்கால்)

மேற்கண்ட பிரிப்பாய்வு குளப்பகுதிகளை அறிய வழி தருகிறது. இதன்படி கூட்டுச் சொற்களின் முன்னொட்டாக 'குளம்' நீர்நிலைகளைக் குறிக்கின்ற பொதுப்பெயராகவும், அதைத் தொடர்ந்து வருகிற பின்னொட்டுச் சொற்கள் குளப்பகுதிகளைக் குறிப்பிடும் சொற்களாகவும் அமைந்துள்ளது தெளிவாகிறது. இதனடிப்படையிலும் கள ஆய்வில் கண்ட செய்திகளின்படியும் குளமும் குளப்பகுதிகளும் ஒரு மாதிரிப் படமாக வரையப்பட்டுள்ளன. படத்தில் காட்டப்பட்டுள்ள எல்லா அமைப்புகளும் எல்லாக் குளங்களிலும் அமைந்திருக்குமென்று உறுதியாகக் கூற முடியாது.

குளம் மற்றும் குளப்பகுதிகள் பற்றிப் பேசுகின்ற சில கல்வெட்டுச் சொற்கள், சொற்றொடர்கள் கீழே விளக்கமாகப் பேசப்படுகின்றன. கி.பி

8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று முதன்முதலில் **வாலிவடுகனாயின கலிமூர்க்க இளவரையன் செய்தகுளம் வாலிஏரி** என்று பேசுகிறது.[1] அதில் வரும் 'செய்தகுளம்' என்ற சொல் புதிதாகச் செய்யப்பட்ட குளத்தைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டுச் செய்தியில் குளம் என்ற சொல்லும் ஏரி என்ற சொல்லும் ஒரே பொருளைத் தரும்படியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏரியும் குளமும் ஒன்றே என்றும், இரண்டுமே புதிதாகச் செய்யப்பட்ட நீர்நிலைகள் என்றும் கருதலாம். இருப்பினும் கல்வெட்டைக் கூர்ந்து நோக்கும்போது இயற்கையான நீர்நிலைப் பிடிப்புகள் ஏரி என்றும் அவ்வேரியின் நீர்நிலைப் பிடிப்புப் பகுதியில் மிகுதியாக நீர் தேங்குவதற்காக மாற்றம் செய்யப்படும்பொழுது அது குளம் என்ற பெயரைப் பெறுவதாக எடுத்துக் கொள்ளலாம். அங்ஙனம் நோக்கும்பொழுது ஏற்கனவே வாலிஏரி என்ற பெயருடன் விளங்கிய ஏரியை கலிமூர்க்க இளவரையன் என்பவர் வெட்டியோ, திருத்தி அமைத்தோ தன் பெயரை இட்டுக் கொள்கிறார்.

அட்டவணை

க.வெ.எண்.	ஆண்டு	ஊர்	ஏரிக்குளம்
349	1261	ஒலியமங்கலம்	இராமனேரிககுளம்
402	1288	பேரையூர்	தக்கனேரிக்குளம்
448	1322	பின்னங்குடி	சீயனேரிக்குளம்
481	---	ஆதனூர்	காடிஏரிக்குளம்



குளமும் குளப்பகுதிகளும்

A to A = குளக்கரை

B to B = முன்குளம்

C = குளமும் குளப்பகுதிகளும்

D = முன்குளத்தே நடப்பட்டுள்ள நீரளவைக் காட்டும் கல்

E = குளங்கோவை அல்லது நீர்க்கோவை குளத்தின் குளப்பரப்பு எல்லையில் நடப்படடுள்ள நீரளவைககாடடும் கல்

F = உள்பாதை

G = வெளிப்பாதை

H = தனதோடுகுழி

I = மடையின் உள்பாதை

II = மடையின் வெளிப்பாகை

படத்தில் உள்கரையை ஒட்டிக் காணப்படும் கல் அமைப்பு நீரலையின் வேகத்தை குறைக்கும் பொருட்டு பாவப்பட்டுள்ள கற்பரப்பு

குளவாரி, குளவாய், குளவாத்தலை போன்ற கூட்டுச் சொற்கள் குளம் மற்றும் குளப்பகுதிகளின் மீதான விற்பனை பற்றிப் பேசுகின்றன. இச்செய்திகள் 11 ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்ற கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது. கி.பி. 1013 ஆம் ஆண்டு உறத்தூர்க் கூற்றத்தைச் சார்ந்த விக்ரமகேசரி சதுர்வேதிமங்கலத்துச் சபையார் குளத்தோடு சேர்த்து குளக்கரை, குளப்பரப்பு மற்றும் குளவாரியையும் விற்றுள்ளனர். [2] 12ஆம் நூற்றாண்டில் விற்கப்பட்ட ஒரு நிலத்தின் எல்லைகள் பற்றிய குறிப்பில் குளத்திற்கு நீர் வருகிற வாய்க்கால் 'சரல்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. [3] அதே போன்று நெல்வேலி என்ற ஊர்க்குளத்திற்கு நீர் வரும் வாய்க்காலை 'வாத்தலை' என்று ஒரு கல்வெட்டு சொல்கிறது. [4] கி.பி. 1250ல் தேவர் குளமும் செக்காலைக் குளமும் விற்கப்பட்டபோது அவற்றுடன் சேர்த்து அக்குளங்களால் நீர்ப்பாசனம் பெற்ற வயல்களும் அக்குளங்களுக்கு நீர் கொண்டு வருகிற கால்களும் விற்கப்பட்டுள்ளமை அறியப்படுகின்றது.[5] கி.பி.1259 ல் எத்தப்பொழில் குளத்திற்கு நீர் போகிற வாய்க்காலும் கால் என்றே குறிப்பிடப்பெற்றுள்ளது. [6] அதே போன்று 1301ல் சீரமைத்துக் கட்டப்பட்ட வாய்க்கால் 'பழங்கால்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதன் பழமையை வலியுறுத்துகிறது.[7] மேற்கண்டபடி, வாரி, வாய், சரல், வாத்தலை, கால், பழங்கால் போன்ற சொற்களும் குளத்திற்கு நீர் வரும் வாய்க்காலை (Feeder Channel) குறிக்கின்றன என்பது தெளிவு. தொழில் நுட்ப நோக்கில், இவையனைத்தையும் குளத்திற்குள் நீர்வருகிற 'உள்பாதை' என்று சொல்லமுடியும்.

'வெளிப்பாதை' (drainage Channel) அதாவது குளத்திலிருந்து நீர் வெளியேறும் பகுதி குளத்தின் மற்றுமொரு சிறப்பான பகுதியாகும். படத்தில் காட்டியுள்ளபடி உள்பாதை போன்ற நீர்வெளிப்போகும் வெளிப்பாதையும் குளத்தின் ஓரம் அல்லது எல்லைப் பகுதியில் அமைந்திருக்கும். எனவே, அவை கடைக்கால்கள் என்றழைக்கப்படுகின்றன.

கடைக்கால் = கடை + கால் (இறுதி + வாய்க்கால்)

கி.பி. 1253 ல் கான நாட்டு விரையாச்சிலை ஊரின் ஊராட்சியர் நிலங்களும் குளங்களும் விற்றபோது, ஒரு குளத்தின் வடக்கு தெற்கு எல்லைகளின் கல்லூன்றிக் கொள்ளும் உரிமையைத் தந்துள்ளனர். இந்தக் கற்கள் குளத்தின் எல்லை ஓரங்களில் நீரின் அளவைக்காட்டவும் குளப்பரப்பின் எல்லையைக் காட்டவும் பயன்பட்டிருக்கக்கூடும்.[8] **'தென்கடைக்காலில் கல்நாட்டும் மற்றும் வடகலைக்காலில் கல்நாட்டும்'** என்று அக்கல்வெட்டு சொற்றொடர் செல்கிறது. தென்கடைக்கால், வடகடைக்கால் என்பன குளத்தின் முறையே வட, தென் பகுதிகளிலுள்ள வெளிப்பாதையைக் குறிக்கும். கி.பி. 1259ல் கேரளசிங்க வளநாட்டு மறைமான விக்கிரமபாண்டிய நல்லூரின் ஊராட்சியர் கேசனேரி குளத்தின் உபரி நீரை எத்தபொழில் குளத்திற்கு கால்வாய் வெட்டி நீர் வெளியேறுகிற குழி கொண்ட ஒரு குளம் **தனதோடுகுழிக்குளம்** என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. [10]

கி.பி. 1280 ல் ஒரு குளத்தின் மீதான உரிமை விற்கப்பட்டபோது, அக்குளத்தின் கரையை உயர்த்தி நீரேற்றம் பார்த்துக் கொள்ளும் உரிமையும், முன்குளத்தே கல்நாட்டிக்கொள்ளும் உரிமையும் சேர்த்தே விற்கப்பட்டுள்ளன. முன்குளம் என்பது குளத்தின் ஆழமான கணிசமான அளவில் நீர் நிற்கின்ற குளப்பகுதி. இந்த ஆழ் பகுதியிலேயே பெரும்பாலும் மடைகளும் குமிழிகளும் அமைக்கப்பட்டிருக்கும். இப்பகுதி முன்குளப்பரப்பு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. [11]

அடிக்குறிப்பு

1. புதுக்கோட்டை கல்வெட்டுத் தொகுதி, க.வெ.எண். 30
2. புதுக்கோட்டை கல்வெட்டுத் தொகுதி க.வெ.எண். 90 குளமும் குளக்கரைப் பரப்பும் குளவாரியும்
3. மேலது, 136-கச்சா குளத்துக்கு போகிற சரலுக்குத் தெற்கும்
4. மேலது, 668-நெல்வேலி குளத்துக்கு நீர் பாய்கிற வாத்தலைக்கும்
5. மேலது, 346-செக்காலைக் குளமும் வயல்களும் கால்களும்; தேவர் குளமும் வயலும் கால்களும்
6. மேலது, 361-எத்தபொழில் குளத்துக்கு நீர் போகிற கால்க்கும்
7. மேலது, 582 நீர் வருகிற பழங்காலுடைப்படைத்து
8. மேலது, 346-தென்கடைக்காலில் கல்நாட்டும் வடகடைக்காலில் கல்நாட்டும்.
9. மேலது, 361-இக்குளத்துக்கு (எத்தபொழீல் குளத்துக்கு) கேசனேரியில் கடைவிடு நீர்க்கால் வெட்டி கடைவிடுநீர் பாய்ச்சிக் குடுப்போமாகவும்.
10. மேலது, 361
11. மேலது, 421 – இக்குளத்தில் கரை தமக்குள்ளேயுயற்றிக்கொண்டு - நீரேத்தம் பாத்து முன்குளத்தே கல்நாட்டிக் கொள்வாராகவும்

பராந்தக சோழன் காலத்துக் கலிங்கு

து. துளசிராமன்
ப. வெங்கடேசன்

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், அரக்கோணத்திலிருந்து 11 கி.மீ. தொலைவிலும், நெமிலி என்னும் ஊரிலிருந்து 6 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது பல்லாவரம் என்கிற சம்பத்துராயன் பேட்டை. இவ்வூருக்கு வடக்கே 1/2 கி.மீ தொலைவில் வடக்கு தெற்காக 200 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட கலிங்கு அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணையின் இருமுனையிலும் மேல் பகுதியில் வட்டவடிவ கொத்தளம் போன்ற அமைப்பு உள்ளது. வடக்கு கொத்தளத்தில் பெருமாள் கோயிலும், தெற்கு கொத்தளத்தில் விநாயகர் கோயிலும் உள்ளன. வடக்கு முனையிலுள்ள பெருமாள் கோயில் அழிந்துவிட்ட நிலையில் உள்ளது. தென்முனையிலுள்ள கோவிலில் விநாயகர் சிலை உள்ளது. இது முற்காலச் சோழர் கலைப்பாணியைக் கொண்டு விளங்குகிறது. இது கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இவ்விநாயகரை கலிங்கு விநாயகர் என ஊரார் அழைத்து வழிபட்டு வருகின்றனர்.

விநாயகர் கோயிலுக்கு கிழக்குப் பகுதியில் ஒரு கற்பலகையில் கல்வெட்டு ஒன்று உள்ளது. இதில் ***ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட*** என்ற ஒரு வரி மட்டுமே தெரிகிறது. மற்றவை பிற்காலத்தில் எழுப்பிய சிறிய சுவர் அமைப்பால் மறைக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டைக் கொண்டு நோக்கும்போது இக்கலிங்கு அணை முதலாம் பராந்தக சோழன் காலத்தில் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு இருக்கலாம் என்று தெரிகிறது.

30 செ.மீ x 17 செ.மீ x 15 செ.மீ அளவுள்ள செங்கற்களைக் கொண்டு மிக நேர்த்தியாகவும், வலிமையாகவும் இவ்வணை கட்டப்பட்டுள்ளது. அடியில் மணற்பரப்பில் 20 வரிசை செங்கற்கள் Header and streture என்ற முறையில் அடுக்கிக் கட்டப்பட்டு, அதன்மீது செவ்வக வடிவ (45 செ.மீ x 30 செ.மீ x 10 செ.மீ) கருங்கற்பலகைகளைப் பரவி, மீண்டும் 6 வரிசை செங்கற்களை அடுக்கி அதன்மீது மீண்டும் கருங்கற்களை பாவியுள்ளனர். இதுபோன்று மொத்தம் 5 அடுக்குகளில் செங்கற்கள், கருங்கற்பலகைகள் என அடுக்கி மிக வலிமையாகக் கட்டியுள்ளனர். இவ்வணையின் இருபுறமும் 30 அடி விட்டமுள்ள வட்ட வடிவமான கொத்தளங்கள் போன்ற அமைப்புகள் கட்டப்பட்டுள்ளன. இவ்வணையைக் கட்டுவதற்காகச் சுண்ணாம்பும், மணலும் இணைப்புப் பொருட்களாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

மழைக்காலத்தில் காவேரிப்பாக்கம் ஏரி நிரம்பி பின் கலிங்கின் வழியாக வெளியேறும் நீர் உப்பரந்தாங்கல், துரைப்பெரும்பாக்கம், ஈராளச்சேரி, ஆலப்பாக்கம், பெருவளையம், சிறுவளையம், உள்ளியநல்லூர், தருமநீதி, ரெட்டிவலம், அகவலம் முதலிய 30க்கும் மேற்பட்ட ஏரிகளைக்கடந்து

பனப்பாக்கம் என்னும் ஊர் அருகே கல்லாறு ஆக உருவெடுத்து, கலிங்கு அணையின் தெற்குப் பகுதியை வந்தடைகிறது.

வாலாஜாவட்டம், பொன்னை ஆற்றிலிருந்து வரும் நீர் பெருங்காஞ்சி ஏரியை நிரப்பி பின் சூரை, ஆயல், போளிப்பாக்கம், தப்பூர், கோவிந்தாங்கல், பழையபாளைய மோட்டூர், அஞ்சமந்தூர், சிற்றேரி, நாகவேடு, அரும்பாக்கம், பாடி, கீழாந்துரை, பெருமுச்சி முதலிய 20க்கும் மேற்பட்ட ஏரிகளை நிரப்பி கலிங்கு அணையின் மேற்கு, வடக்குப் பகுதிகளை வந்தடைகின்றது. மேற்கு, தெற்கு, வடக்கு முதலிய பகுதிகளிலிருந்து வேகமாக வரும் நீரை சிதறாமல் இவ்வணை ஒருமுகப்படுத்தி, ஓர் ஆற்றை உருவாக்குகின்றது. கலிங்கிலிருந்து வரும் நீரைப் பராமரிக்க பல்லவர், சோழர் ஆட்சியில் கலிங்கு வாரியம் ஒன்று இப்பகுதியில் நடைமுறையில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வணையின் வழியாக வரும் நீர் பழைய பாலாறு என்னும் பெயரில் திருமால்பூர், தக்கோலம், சோழபுரம், மணவூர், பூண்டி, அத்திரம்பாக்கம், ஒதப்பை, காரனோடை ஆகிய ஊர்களின் வழியாகப் பாய்ந்து எண்ணூருக்கு அருகில் கடலில் கலக்குகிறது. இதற்கு குசஸ்தலையாறு அல்லது கொறத்தலையாறு என்ற பெயரும் வழங்கப்படுகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழர்காலத்தில் இக்கலிங்கு அணை கட்டப்பட்டு, இன்றளவும் நிலைத்து நின்று, சோழர் கட்டடக்கலை மற்றும் நீர்ப்பாசனத் திறனுக்கு ஓர் அரிய சான்றாக விளங்குகிறது என்பதே முக்கியமான செய்தியாகும்.

மடை அமைப்பில் பண்டைய தொழில்நுட்பம்

திரு.கரு.இராஜேந்திரன்

புதுக்கோட்டை நகரிலிருந்து தென்மேற்கில் சுமார் 22கி.மீ. தொலைவில் மேலப்பனையூர் அமைந்துள்ளது. மேலப்பனையூர் சுற்றி பெருங்கற்கால மனிதர்களின் ஈமக்காடுகள் உள்ளதால், இங்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இவ்வூர் ஆதிநாளில் பனையூர், ஆதிபனையூர், கூடலூர் நாட்டுப் பனையூர் என்றே அழைக்கப்பட்டு வந்தது.

பனையூரைச் சுற்றி தற்போது பல பாசனக் கண்மாய்கள் உள்ளன. அதில் பனையக் கண்மாய் ஒரு பெரிய பாசனக் கண்மாயாகும். சுமார் 10 கி.மீ. தொலைவிலிருந்து பல கண்மாய்கள் ஒவ்வொன்றாகப் பெருகி பனையக்கண்மாய்க்கு நீர் வந்து சேரும்படி சங்கிலித் தொடர் கண்மாய்கள் அமைந்துள்ளன. இக்கண்மாயும் பெருகி - கூதாடன் கண்மாய் என்ற கண்மாயில் விழுந்து அது பெருகி அதன் பின்பு வெள்ளாற்றின் துணை நதியான குண்டாற்றில் போய்விழுகிறது.

பனையக்கண்மாயின் பாசனப்பரப்பு சுமார் 200 ஏக்கர் ஆகும். பனையத்தில் இரண்டு மடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு மடைகளின் பழைய மடை அமைப்புகள் நல்ல நிலையில் இருக்கும்பொழுது பழைய மடைகளை அப்படியே வைத்துவிட்டு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கரையினை ஒட்டி இரண்டு தொட்டி மடைகள் கட்டப்பட்டு அதன் வழி வயல்களுக்கு நீர்பாய்ந்து வருகிறது.

பனையக் கண்மாயின் இரண்டு மடைகளில் ஒன்று பெரியமடை என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. பெரிய மடை ஏணி போன்ற அமைப்பில் இரண்டு தூண்கள் நடப்பட்டும் தூண்களை இணைப்பதற்கு மூன்று குறுக்குக்கல் இணைப்பாக வைத்தும், தூண்கள் சாய்ந்து விழுந்துவிடாதவாறு சாற்றுக்கல் பின்புறத்தில் (பலகைக்கல்) சுற்றியும் பக்கவாட்டிலும் முன்பக்கமாகவும் தூண்கள் சாய்ந்து விடாதபடி தாங்கு தளம் அமைக்கப்பட்டும் உள்ளது. மடையில் நீர்புகுந்து வயல்களுக்குச் செல்வதற்கு வசதியாக மடையின் அடியில் கல்லாலான பெட்டி போன்ற அமைப்பை உருவாக்கி பெட்டிக்கல்லில் நாழி வாய் (நாழியின் வாய் போன்றதால் நாழிவாய் எனப் பெயர் பெற்றது) சிறியதும், பெரியமுமாக இரண்டும், சேரோடி (சேரும் ஓடக் கூடியது சேரோடி) அரை வட்ட வடிவத்தில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் போது நீரில் மூழ்காமல் நீருக்கு மேல் மடைத்தூணில் நின்றவாறு நாழிவாயை அடைப்பதற்கும் திறப்பதற்கும் நாழிவாய்க் கட்டையினை கம்பியின் மூலம் தூக்கவும் இறக்கிவிடவும் குறுக்குக் கற்களில் துளையிடப்பட்டுள்ளது.

நீர் பாயவேண்டிய பாசனப் பரப்பளவின் தேவைக்கு ஏற்ப நாழி வாய்த்துளையைத் திறந்திட பெரியதாக ஒன்றும் சிறியதாக ஒன்றும் இரண்டு நாழிவாய்த் துளைகள் ஒரே நேர்க்கோட்டில் அமைக்கப்பட்டுள்ளன. பெரிய நாழிவாயின் விட்டம் 4.2 அங்குலம் (11 செ.மீ.), சிறிய நாழிவாயின் விட்டம் 3.2 அங்குலம் (8 செ.மீ.). சேரோடி என்பது படுக்கை வசத்தில் உள்ள துளையாகும். அரை வட்ட வடிவத்தில் 5 அங்குல விட்டத்தில் இத்துளை அமைந்துள்ளது. 12.5 செ.மீ. விட்டம் கொண்டது.

மடைத்தூணில் கி.பி.13ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் ஒரு கல்வெட்டு உள்ளதால் இம்மடை அதே நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். மடையில் நாழிவாய், சேரோடித்துளை அமைப்புகள் பண்டைக் காலம் முதல் காலங்காலமாக நமது முன்னோர்கள் கடைபிடித்து வந்த அமைப்பு முறையாகும். இந்த அமைப்புமுறை நுட்பத்தினை அடிப்படையாக வைத்தே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொட்டிமடை அமைக்கப்பட்டது என்றால் பழங்கால தமிழரது மடை அமைப்பு பொறியியல் தொழில்நுட்பம் வியந்து போற்றத்தக்கது.

ஏரி உருவாக்குவது பரம்பரைத் தொழிலா ?

1. ஸ்ரீ கொமாறஞ்சடையனோடு சொழநாட்டிடவையாத்
2. திரை செய்த பராந்தகப்பள்ளிவெளானாஇன நக்
3. கம்புள்ளன் றன்பெராற் புள்ளனெரி என்று
4. குளமாக்கிக் கற்கொதிக் குமுழி செய்வித்துக் குறை
5. ப்பணி நின்றது முற்றுப் பெறுத்தான் புள்ள ந
6. க்கன் னது செய்த தச்சன் வடுகங் கூற்றான
7. வன் மகன் குறைப்பணி முற்றுவிக்க புள்ளந
8. க்கன் அவனுக்குக் காணியாக அட்டின பூமிப் பள்
9. ளிநாட்டிரண்டு கூற்றிலும் ஊர்குளத்துக்கிழ்
10. தலைநீர் பாடுகால் லொரொ வயல் பதக்
11. கு நெல்

பாண்டியமன்னன் கோமாறஞ்சடையன் (இரண்டாம் வரகுணபாண்டியன்) சோழ நாட்டு “இடவை” நகரத்தின் மீது படையெடுத்துச் சென்றபோது “நக்கன்புள்ளன்“ என்ற படைத்தலைவனும் அவனுடன் சென்றான். போர் முடிந்ததும் பாண்டியநாடு திரும்பி இன்று திண்டுக்கல் வட்டத்திலுள்ள இராமநாதபுரத்தில் “புள்ளனேரி“ என்ற ஓர் ஏரியைப் புதிதாக உண்டாக்கி அதற்கு கற்கோதி குமிழ் செய்விக்கத் துவக்கினான். இப்பணி நடந்து கொண்டிருக்கும் போது இவன் இறந்து விடவே இவன் மகன் புள்ளன்நக்கன் என்பவன் இப்பணியை முடித்தான். இப்பணியைச் செய்த தச்சர் யார் என்றும் அதற்காக அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் எவ்வளவு என்பதையும் இங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது. புள்ளன் நக்கன் உயிரோடு இருந்த போது இப்பணியைச் செய்தவன் வடுகன்கூற்றன் ஆவான். நக்கன்புள்ளன் இறந்த காலத்திலேயே இவனும் இறந்து விடவே இவன் மகன் நக்கன்புள்ளனின் மகன் புள்ளன்நக்கன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து இப்பணியை முடித்தான். இதனை இவன் செய்து முடிக்கப் புள்ளன்நக்கன் காணியாகக் கொடுத்த பூமி **பள்ளி நாட்டிரண்டு கூற்றிலும் ஊர் குளத்துக்கீழ் தலைநீர்** பாயும் வயல்களாகும்.

இக்கல்வெட்டு உணர்த்தும் செய்தியானது

போரில் பெற்ற செல்வத்தை வெற்றி பெற்ற அரசர்களும், தளபதிகளும் நீர்வளம் பெருக்கும் ஏரிகளை உருவாக்குவதற்காக செலவிட்டனர். அதனால் நாட்டின் வருவாய் பெருகியதுடன் மக்களின் வாழ்வும் வளமானது.

இதனையே சோழமன்னன் முதலாம் இராஜேந்திரன் (1012 – 1044) கங்கை வரை சென்று போரில் வெற்றி பெற்றதைக் கொண்டாடும் வகையில், தன் புதிய தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தில், சோழகங்கம் என்ற பெரிய ஏரியை உருவாக்கினான். இதனை திருவாலாங்காடு செப்பேடு 'நீராலான வெற்றித்தூண்' என்று கூறுகிறது.

ஏரியை கட்ட ஆரம்பித்த தச்சன் புள்ளநக்கனின் மகன் நக்கன்புள்ளன், தந்தை விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து செய்து முடித்தது, ஏரியை உருவாக்கும் தொழில்நுட்பம் பரம்பரைத் தொழிலாக இருந்திருக்கலாமென்று எண்ணத் தோன்றுகிறது. அத்தகைய பணிகளுக்கு சன்மானமாக வளமான, நீர்ப் பிரச்சினை இல்லாத மடையடி நிலங்களை வழங்குவது வழக்கம் என்றும் அறிய வருகிறது.

தொகுப்பு: இரா.சிவக்குமார்

ஒன்பதாம் நூற்றாண்டில் ஏரிப் பராமரிப்பு

நென்மேனிக் கல்வெட்டு (கி.பி. 825)

1. கோச்சடைய மாறர்க்கு யாண்டு
2. ம் அ அவ்வாண்டு இருஞ்சோழ
3. நாட்டு நென்மலி அம்பலம் எ
4. டுப்பித்து பெருங்குளத்தே
5. ம் நென்மலித் தென் மேலூர்
6. வாயலுக்கு வடக்கும் நென்ம
7. லி நக்கன் கோயிலுத் தெ
8. ற் கும் இந் நடுவு கிடந்த
9. பழங்கரை இழித்து இருப்பை
10. க்குடி கிழவ நாயின் எட்டி சா
11. த்தன் கிழவனேரி என்று தந் பெ
12. ரிட்டு எறுவித்து கருங்கற்கொ
13. ண்டு மடை வைப்பித்து இன்ன
14. டுவு பட்டகரை கிழவனேரி என்
15. நீரன்ற நீர் சென் நீல நதிக்கு
16. டி மீன்............ மெலி இச்சேரி தெ.
17. ய(ர)ட்டு மீன்களின் சொல்லிக் கொள்
18. வன் இருப்பைக் குடி கிழவன்
19. இன்ன செய்தோர் மோவிதவனன்.

பாண்டிய மன்னன் கோச்சடையமாறனின் 8ம் ஆட்சி ஆண்டில் இருக்கைகிழவன் என்ற குறுநில மன்னன் நென்மேனி கிராமத்து ஏரியில் மேலு வயலுக்கு வடக்கும் நென்மலி நக்கள் கோவிலுக்குத் தெற்கிற்கும் இடையிலுள்ள பழங்கரையை இடித்து, புதிய கரையெழுப்பினான். இவ்விடத்தில் கருங்கற்களைக் கொண்டு புதிய மடையும் ஏற்படுத்தினான். இவ்வேரிக்கு அவன் பெயரால் கிழவனேரி என்று பெயரிட்டான்.

ஏரிக்கல்வெட்டு (கி.பி. 831)

1. ஸ்ரீ கோச்சடைமாறற்கு யாண்டு பதினா
2. று இவ்வாண்டு பழங்கரை இழித்து அத
3. னடி இற் கல்லு நாட்டி மன்னுமடைக்கு மே
4. ற்குக் கருங்குளத்துக்குக் கிழக்கு நில
5. த்திட்டு கரைசெய்து மடை வைய்ப்பி
6. த்து இருப்பைக்குடி (க்) கிழவன் தன்
7. பேரிட்டு எறுவித்தது இவ்வெல்லைஇ
8. ற் கிடந்த கரை கிழவனெரி என்பது
9. கொங்கார் மலர்க் கடம்பு சூட்டாதிக் கொல்

10. வளையை எங்கொனிருப்பைக்குடி (க்) கிழவ
11. ன் பொங்கார்ந்த தொட்டார் கரும்பிரைக்கு
12. ந் தொன்னிர் வயலிருஞ் சொழநாட்டா
13. ன் றார் சூட்டு திரெனென்று

பாண்டியமன்னன் கோச்சடையமாறனின் பதினாறாம் ஆட்சியாண்டில் (கி.பி.831) இருப்பைக்கிழவன் இருக்கண்குடி ஏரியின் பழைய கரையை முழுமையாக இடித்து நீக்கியபின் அதன் அடியில் கல்நட்டி மன்னுமடைக்கு மேற்கிலிருந்து கருங்குளத்து மடைக்கு கிழக்கு பகுதி வரை புதிய கரையை எழுப்பி அதன் இடையில் மடை ஒன்றையும் கட்டி, அந்த ஏரிக்கு கிழவனேரி என்று தன் பெயரையும் சூட்டினான்.

ஏரி பராமரிப்பு பணியில் தற்பொழுது கரை முழுமையாக இடிக்கப்படுவதில்லை. அக்காலத்தில் கரையை முழுமையாக நீக்கப்பட்டதற்குக் காரணங்கள் இருந்திருத்தல் வேண்டும். இப்பகுதி கரையில் நிலமட்டத்தில் நீர் கசிவு ஏற்பட்டு இருந்திருக்கலாம். இதைத் தடுப்பதற்காக கரையை முழுமையாக நீக்கிவிட்டு, நிலமட்டத்தில் கரையின் நடுப்பகுதியில் கற்பலகைகளை நட்டுவித்து பின்பு புதிய கரையை முறைப்படி புதுப்பித்திருக்கிறான் என்ற செய்தி பாசன தொழில்நுட்பத்தில் அந்நாளைய மக்களின் திறன் தெரிகிறது. இது போன்ற நிலையில் இக்காலத்தில் கரையில் நீர்கசிவை தடுக்க கரையின் நடுவில் சுண்ணாம்பு அல்லது சிமெண்ட் காரையில் கற்சுவர் கட்டப்படுவது ஒப்பு நோக்குவதற்குரியது.

இதற்கு முந்தியகாலக் கல்வெட்டானது பாண்டிய மன்னன் கோச்சடைமாறனின் எட்டாம் ஆட்சியாண்டு (கி.பி.825) காலத்தியது. அக்கல்வெட்டில் இருப்பைக்குடிக் கிழவன் நென்மேனி ஏரியில் மேல வயலுக்கு வடக்கேயும் நக்கன்கோவிலுக்கு தெற்கேயும் உள்ள பகுதியில் பழைய கரையை இடித்து கருங்கல்லாலான மடை எடுப்பித்து, கிழவனேரி என்று பெயரிட்டதைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் கரையின் நடுப்பகுதியில் கல்பதித்ததாகத் தகவல் இல்லாததால், தேவையேற்பட்டால் மட்டுமே கல்பதித்தல் வழக்கமாக இருந்திருத்தல் வேண்டும். ஏரியின் வயல்களில் அக்காலத்திலேயே கரும்பும் பயிரிட்டு வந்தது தெரிய வருகிறது.

பாறைக்கல்வெட்டு (கி.பி. 815 – 862)

பாண்டியமன்னன் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் காலத்தில் சாத்தூர் வட்டத்தில் இருந்த இருஞ்சோணாடு என்ற சிறு நாட்டுப்பகுதியின் தலைவனாக விளங்கிய இருப்பைக்குடிக்கிழவன் என்று அழைக்கப்பட்ட எட்டிச் சாத்தன் ஆவான். இவன் சாத்தூர் வட்டத்தில் பல புதிய பாசனக்குளங்களைத் தோற்றுவித்ததோடு பழைய பாசனக்குளங்களையும் புதுப்பித்து பராமரிப்புப் பணியினையும் மேற்கொண்டவன். இவனது பாசனப்பணிகளைத் தொகுத்து வட்டெழுத்துக் கல்வெட்டு இருக்கண்குடி பாறையில் பொறிக்கப்பட்டுள்ளது.

அவன் செய்த பாசனப் பணிகள்

1. தென்வெளியன்குடியில் கரையெடுத்து ஏரிகட்டி கிழவனேரி என்று பெயரிட்டான்.
2. மாறனூர் பெருங்குளத்தைத் திருத்தி கரையமைத்து கிழவனேரி என்று பெயரிட்டான்.
3. இருப்பைக்குடியின் வள்ளைக்குளக்கரையையும் மடையையும் திருத்தி பத்தன்மடை என்ற புதியமடையைக் கற்களாலும் கட்டினான். திருமால் ஏரியை திருத்தியமைத்தான்.
4. கொழுவூரில் தன் மன்னன் பெயரால் மாறனேரி என்ற ஒன்றையும் 'புகழ்மலி ஏரி' 'புகழ் நெறிநடை ஏரி' என்ற பெயர்களில் இரண்டு ஏரிகளையும் தோற்றுவித்தான்.
5. நென்மலி பெருங்குளங்கரையைத் திருத்தி கற்களால் ஆன மடையும் ஏற்படுத்தி கிழவனேரி என்று பெயரிட்டான்.
6. சாத்தூரில் இருந்த பெருங்குளம், புதுக்குளம் என்ற இருகுளங்களில் மடைகளைக் கருங்கற் கொண்டும் செங்கற் கொண்டும் திருத்தி அமைத்தான்.
7. தன் மன்னன் அமைத்த சிரிவல்லபமங்கலம் (கங்கை கொண்டான்) செழிக்க 'திருநாராயணன்' என்ற பெயரில் ஏரி ஒன்றை ஏர்நூலிட்டு ஏறுவித்து அதற்குக் குளவாயோடு மடையும் அமைத்தான்.
8. இருஞ்சோழநாட்டிலுள்ள அத்தனை ஏரிகளையும் திருத்தியமைத்த இருப்பைக் குடிக்கிழவனின் பெரும்புகழ், சூரியனும் சந்திரனும் இருக்கும் வரை நிலைத்து இருக்கும்.

தொகுப்பு: ச.மா. இரத்னவேல்

11380

ஏரிகளைக் காப்போம்

தமிழகத்தில் பாசன ஏரிகள் அழிந்து வருகின்ற நிலையில், பல தன்னார்வக் குழுக்களும், பல பாசன அறிஞர்களும் ஏரிகளைக் காப்பாற்றுவதற்கு குரல் கொடுத்து வருகின்றனர். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஏரிகளைப் பாதுகாப்பதற்கு அவற்றை உருவாக்கியவர்களே உருக்கமான வேண்டுகோள் விடுத்த செய்தியை கல்வெட்டுகளில் காணும் பொழுது மகிழ்ச்சி தருகிறது. அச்செய்தியை மக்களுக்குத் தெரிவித்து, ஏரியைப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டியது நம் கடமை.

எட்டாம் நூற்றாண்டு

தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்தில் ஓங்கூர் என்ற ஊரில் ஓர் ஏரி உள்ளது. அது ஓங்கூர் ஆற்றிலிருந்து நீர் பெறுகிறது. இதன் மதகின் அருகில் உள்ள கல்லில் எழுத்துள்ளது. இரண்டாம் நந்திவர்மப் பல்லவனின் (கி.பி.731 - கி.பி.796) பதினான்காம் ஆண்டில் இந்த ஏரிக்கு மதகு பொருத்தப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டை ஆய்ந்து, திண்டிவனம் பொதுப்பணித்துறை அருங்காட்சியகத்தில் சேர்ப்பித்தவர் முனைவர் கொடுமுடிசண்முகனார்.

கல்வெட்டு வாசகம்

கோவிசைய நந்திவிக்ரமபருக்கு
யாண்டு பதினாங்காவது
பாலூர் கோட்டத்துப் பதினாட்டு
ஓகூர் ஒட்டியரு கிழான்
சேத்தன் மகன் றாழன் செய்கை
இதுகாத்தானடி என் முடிமேலன.

எட்டாம் நூற்றாண்டு, பத்தாம் நூற்றாண்டுகளிலே ஏரியை உருவாக்கியவர்கள், ஏரியைப் பாதுகாப்பவர்களின் கால், தங்கள் தலைமேல் என்று நன்றி தெரிவித்த செய்தியைத் தெரிந்தபின்பு ஏரியைப் பாதுகாக்க விவசாயப் பெருங்குடி மக்களின் காலைப்பிடித்தாவது வேண்டுகோள் வைப்பது நமது கடமை.

பத்தாம் நூற்றாண்டு

ஓமலூர் தர்மபுரி சாலையில் பூசாரிபட்டி அருகில் உள்ளது தாசசமுத்திரம் ஏரி. அந்த ஏரியின் கரை மீது ஒரு கன்னிமார் சிலை சிறிய

அளவில் வைத்து வணங்கப்பட்டு வருகின்றது. அதற்குச் சற்றுத் தொலைவில் தனியாக ஒரு பலகைக்கல் நடப்பட்டுள்ளது. அதன் இருபுறமும் எழுத்துக்கள் காணப்படுகின்றன. முன்பக்கம் 8 வரியும், பின்பக்கம் 8 வரியும் உள்ளன.

அதன் வாசகம் வருமாறு

முன்பக்கம்	*இரண்டாம் பக்கம்*
ஸ்வஸ்தி ஸ்ரீ ராஜ ராஜ சோழ தேவற்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு பதி நொற்றாவது வடபூவாணிய நாட்டு கச்சிப்பள்ளியில் காமிண்டந் பொங்கிலந் அடந்தாந்களியும்	எந்தம்பி.................................ம் இவ்விருவே மெங்கல் கைய்யால் மண லொழுக்கி இவ்வேரி கட்டிநோம் இந்த நம் அழிவு படாமற் காத்தாற் காலெந் தலைமேலின

இக்கல்வெட்டை பாதுகாப்பாக சேலம்-அஸ்தம்பட்டியிலுள்ள பொதுப்பணித்துறை அருங்காட்சியத்தில் சேர்ப்பித்த முன்னாள் சேலம்-தர்மபுரி வட்ட கண்காணிப்புப் பொறியாளர் முனைவர் கொடுமுடி சண்முகனார் அளித்த விளக்க உரையாவது,

பேரரசன் இராசராசன் ஆட்சி கி.பி.985 - 1016 ஆகும். இக்கல் எழுதியது கி.பி.996ஆம் ஆண்டு ஏரியை கட்டியவன் பொங்கிலன் அமர்ந்தான்களியும் அவன் தம்பியும். இப்பகுதி அக்காலம் வட பூவாணிநாடு எனப்பட்டது. இவ்வூரின் பழைய பெயர்கச்சிப்பள்ளி. காமிண்டந் என்ற சொல் இக்கால கவுண்டன் என்னும் சொல்லின் முன்னோடியாகும். ஊர்த்தலைவன் என்ற பொருளில் அமைந்தது.

பொங்கிலன் அமர்ந்தான்களி, கி.பி.998ம் ஆண்டு வருங்கால சந்ததியினருக்கு வைத்த வேண்டுகோள்.

நானும் என் தம்பியும் எங்கள் இருவரின் கையால் மண் இறுக்கி இவ்வேரியைக் கட்டினோம். இந்த ஏரி அழிவுபடாமல் காப்பவர்கள் கால் என் தலைமேல்.

பிறர் செய் உதவிக்கு நன்றியை தெரிவிப்பதற்கு இருகை கூப்பி வணங்குகிறோம். பெரியவர்களாயிருப்பின் காலில் விழுந்து வணங்குகிறோம். கோவிலில் இறைவனிடம் வேண்டுகோள் வைத்து கீழே விழுந்து வணங்குகிறோம். சொன்னதைக் காப்பாற்ற தலை கொடுப்பேன் என்ற சொல் இன்றும் வழக்கில் உள்ளது.

சக்கரவர்த்தி மகாபலி மூன்றடி மண் கேட்ட, வாமனனாக வந்த இறைவன் நாராயணமூர்த்திக்கு மூன்றாவது அடியாக கொடுத்ததுதான் தன் தலையை.

ஆகவே ஏரியைக் காக்கும் சந்ததியினரின் காலுக்கு தன் தலையை கொடுப்பதாகக் கூறுவது மிகச் சிறந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கும் செயலாகும்.

தொகுப்பு: ச.மா. இரத்னவேல்
மூலம்: கொடுமுடி சண்முகனாரின் கல்வெட்டு ஆய்வு

ஏரிகளின் நிர்வாகம்: உத்திரமேரூர்

முனைவர் சொ.சாந்தலிங்கம்,
தொல்லியல்துறை, மதுரை

தொண்டைநாட்டில் இருந்த மிகச்சிறந்த பேரூர்களில் ஒன்று உத்திரமேரூர். சுமார் 5 சதுர கி.மீ. பரப்பளவில் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே இப்பரந்த ஊர் அமைந்திருந்தது. 12 சேரிகளும், 15 பிடாகை ஊர்களும் இதனுள் அடக்கம். இங்கு தான் குடவோலை முறையில் நிர்வாகக் குழுக்கள் வாரியங்கள் தேர்வு செய்யப்பட்டு இந்தியாவுக்கே ஜனநாயகத்தை அறிமுகம் செய்த நற்பணி நடந்தது. இவ்வூரின் ஜீவநாடியாக ஜனநாயகத்தை அறிமுகம் செய்த நற்பணி நடந்தது. இவ்வூரின் ஜீவநாடியாக அமைந்தது வயிரமேகத் தடாகம் என்னும் பேரேரியாகும். பல்லவ மன்னன் தந்திவர்மனுக்கு (கி.பி.796-847) வயிரமேகன் என்று ஒரு சிறப்புப்பெயர் உண்டு. இப்பெயரால் அமைந்ததுவே வயிரமேகத் தடாகம் என்பர். ஆனால் தந்திவர்மனுக்கு முன்பாகவே வயிரமேகத் தடாகம் இருந்தது என்பர். இவ்வூரை நிர்வாகம் செய்வதற்கென கி.பி.739 லேயே மகாசபை என்ற ஒரு அமைப்புச் செயல்பட்டுள்ளது. இச்சபையின் கீழ் பலவாரியங்கள் பகுக்கப்பட்டு பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் முதன் முதலாகக் கி.பி.878ல் ஏரிவாரியம் என்னும் வாரியம் தான் செயல்பட்டது. பின் சோழர்காலத்தில் தான் தோட்டவாரியம், பொன்வாரியம் எனப்பல வாரியங்கள் இயங்கின. எனவே நீர்ப்பாசனத்திற்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வயிரமேகத்தடாகம் செய்யாற்றிலிருந்து நீர் கொணரப்பட்டு நிரப்பப் பட்டது.

வயிரமேகத் தடாகத்தை ஆண்டுதோறும் குழி குத்திப் பராமரிப்பது (தூர் வாருவது) முறையாகச் செய்யப்பட்டது. இதற்கென வணிகர்களும், செல்வந்தர்களும் நன்கொடைகள் அளித்தனர். அவற்றை வைப்பு நிதியாகக் கொண்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டி மூலம் குழி குத்தப்பட்டது. கி.பி.739லேயே குழிகுத்தப்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. சேட்டத் திரவியத்தையும் உத்திரமேரூர் சபையாரிடம் கொடுத்த வயிரமேகத் தடாகத்தை குழிகுத்த ஏற்பாடு செய்தான். தந்திவர்மனின் 7ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி.803ல்) 5 பட்டி நிலத்தைக் கொடையாகப் பெற்ற பெருங்குறி சபையார் அதனைக் கொண்டு ஏரியைத் தோண்டிக் கரையை உயர்த்தினர். கம்பவர்மனின் ஆட்சிக் காலத்தில் வயிரமேகத் தடாகம் அடிக்கடி குழிகுத்திப் பராமரிக்கப்பட்டது. இம்மன்னனின் 15ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி.883ல்) இத்தடாகத்தைக் குழிகுத்துவதற்காக கழுக்குன்றன் எனும் வாணிகன் ஒருவன்

100 கழஞ்சு பொன்னும் 28 காடி நெல்லும் கொடையளித்தான். அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வணிகன் மண்ணிப்பாக்கிழான் என்பவன் இதே பணிக்காக 100 கழஞ்சு பொன் கொடை அளித்தான். மீண்டும் மூன்று ஆண்டுகள் கழித்து இதே பணிக்காக இதே வணிகன் மேலும் 100 கழங்சு பொன் கொடுத்தான். பொதுவாக ஆண்டுதோறும் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மாமல்லபுரம் அருகில் உள்ள பையனூர்க் கல்வெட்டு ஒன்றால் அறிகிறோம்.

சலவைத் தொழிலாளியும் ஏரியும்

தமிழ்நாட்டில் தற்போதுள்ள கண்மாய்/ஏரி போன்ற நீர்நிலைகள் மன்னர்கள் மற்றும் பெரும் செல்வந்தர்களால்தான் அந்தக்காலத்தில் அமைக்கப்பட்டன என்றே இதுகாறும் நாம் கருதி வந்துள்ளோம். சமுதாயத்தின் அடித்தட்டில் வாழ்ந்து கொண்டிருந்த சலவைத் தொழில் புரியும் தாழ்த்தப்பட்ட மக்களும் கண்மாய் அமைக்க நன்கொடை வழங்கியுள்ளனர். சேலம் மாவட்டம் வாழப்பாடிக்கு அருகில் உள்ள பேளூர் என்னும் கிராமத்தில் உள்ள சின்ன ஏரியில் இருந்த பழைய மதகுக் கல்லில் காணப்படும் கல்வெட்டு எழுத்துக்கள் மூலம் மேற்கண்ட அரிய செய்தி தெரிய வருகிறது.

அதில் முதற்பக்கம் 7 வரிகளும், மறுபக்கம் 6 வரிகளும் உள்ளன. அதன் வாசகம் பின்வருமாறு

முதற்பக்கம்
ஸ்வஸ்திஸ்ரீ
கொலோத்துங்க சோழதேவற்கு
யாண்டு 41 வது
மிலாடாகிய ஜநநாத வளநாட்டுத்
துரவி நாட்டு வெளியூரான ஏரியில்
எறிவீரபட்டணத்து வண்ணான் பிச்சன் சொக்கன்
இடுவித்த தூம்பு

மறுபக்கம்
ஸ்வஸ்திஸ்ரீ
மிலாடான ஜன்னாத வளநாட்டுத்
துரவி நாட்டு வெளியூர்
வண்ணாத்தி தாழிவடுகி
இட்ட தூம்பு

(மூலம்: பேளூர் கல்வெட்டு, கொடுமுடி சண்முகம்)

இதன் காலம் கி.பி.1111 ஆம் ஆண்டு. இக்கல்வெட்டு முன்னாள் கண்காணிப்புப் பொறியாளரும், முனைவருமான கொடுமுடி சண்முகனாரால் பாதுகாப்பாக சேலம் பொதுப்பணித்துறை அருங்காட்சியகத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. சேலம் அரசு அருங்காட்சியகத்திலும் பேளூர்க் கல்வெட்டு கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தது. கொடுமுடி சண்முகனார் இக்கல்வெட்டு எழுத்துக்களுக்கு அளித்துள்ள விளக்க உரையாவது,

வெளியூர் என்று கல்வெட்டு சுட்டும் ஊர் வாழப்பாடிக்கு அருகில் தற்போதுள்ள பேளூர் ஆகும். விவசாயத்திற்கு நீண்ட நாள் தண்ணீர் தேவைப்படுவது போல துணி துவைப்பதற்கும் நெடுநாள் அதாவது கோடை காலம் வரை தண்ணீர் இருப்பது நல்லது. அக்காலத்தில் சலவைத் தொழில்

செய்வோருக்கு கூலியைத் தானியமாக கொடுத்ததால் தொழிலாளர்களும் வளமாகவே இருந்தனர். கணவனுக்குச் சமமாக மனைவியும் நன்கொடை வழங்கியுள்ளது சமுதாயத்தில் பெண்களின் உயர்ந்த நிலையைக் காட்டுகிறது.

இக்கல்வெட்டு உணர்த்தும் செய்தி

அ. சமுதாயத்தில் உயர் மட்ட நிலையில் உள்ளவர்களால் மட்டுமல்லாது அடித்தள மக்களாலும் நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன.

ஆ. சலவைத் தொழில் புரிந்த சமுதாயத்தினரும்கூட வளமான வாழ்க்கை வாழ்ந்துள்ளனர்.

இ. ஆண்கள், மட்டுமல்லாது பெண்களும் ஏரிக் கட்டுமானம் மற்றும் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, எரிப் பராமரிப்பு ஆட்சியாளர்களுக்கு மட்டுமோ, பாசனதாரர்களுக்கோ, பண்ணைகளுக்கோ உரிய பணி மட்டும் அன்று என்பதற்கு இக் கல்வெட்டு ஒரு சாட்சி.

தொகுப்பு: அ. ஆரோக்கியமேரி

பாசனச் சட்டங்கள்

"காலுக்குமேல் கால் கல்லலாகாது"

ஆற்றிலிருந்து நீர் எடுத்து வரும் ஒரு வாய்க்காலுக்கு மேல்பகுதியில் (Upstream) மற்றொரு புதிய வாய்க்கால் வெட்டக் கூடாது என்பது சோழாந்தக சதுர்வேதிமங்கலத்து (சோழவந்தான்) ஏர் சபையின் சட்டம். (மேல்பகுதியில் புதிய வாய்க்கால் வெட்டினால் பழைய வாய்க்காலின் நீரோட்டத்தை குறைக்கும் என்ற காரணத்தால் இச்சட்டம் வழக்கில் இருந்திருக்கிறது. தற்காலத்தில் riparian rights of lower down ayacut என்று அழைக்கப்படுகிறது. இச்செய்தி ஸ்ரீவல்லபபாண்டியனின் ஆட்சியில் 16ம் ஆட்சியாண்டில் குருவித்துறையிலுள்ள பெருமாள் கோவிலில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் 1117 கி.மு. (SII. Vol. XIV. No. 236).

செய்தி முழு விபரம்

தொண்டை மண்டலத்துப் புலியூர்க்கோட்டத்து மாங்காட்டு நாட்டைச் சேர்ந்த சித்தகுட்டி மாதவனான சோழமுத்தரையன் என்ற அரசு அதிகாரி ஒருவன் வைகையாற்றின் தென்கரையில் குருவித்துறை பெருமாளுக்கு சில நிலங்களை தானமாக அளிக்க விலைக்கு வாங்கினான். சோழமுத்தரையன் அதிகாரியாக விளங்கியமையால் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு வாய்க்கால் மேல்பகுதியிலேயே மற்றொரு வாய்க்காலை வெட்டினான். பழையகால் பாதிக்கும் என்ற ஊர் சபையின் விதியையும் மீறி பாராக்கிரம பாண்டியன்காலுக்கு மேல் ஒரு காலினை வெட்டி தான் தானம் அளித்த நிலங்களுக்கு நீர் கிடைக்கும்படி செய்தான். இதைக்கண்ட ஊர்ச் சபையார் அரசனுக்குத் தெரிவித்து அக்காலினைத் தூர்த்தனர். இதனால் புதிய நிலங்களில் நீர் இன்றி பயிர்செய்ய முடியாது. ஆதலால், அவ்வயல்களுக்குப் பதிலாக வைகையாற்றின் வடகரையில் நீர் நன்றாகப் பாயக்கூடிய நிலங்களை அளித்தனர் என்றும் அந்நிலங்களுக்குச் சில வரிச் சலுகைகளை அரசன் அளித்தான் என்றும் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

ஊர்ச்சபையில் இருந்த *ஏரி வாரியம்* என்ற பிரிவு பாசனச் சட்டங்களை அக்கால மக்கள் எவ்வாறு பாதுகாத்து வந்தனர் என்பதை பனிரெண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திய கல்வெட்டு தெரிவிக்கிறது. மேலும் நிலங்களிலிருந்து வரும் வரியைக் கொண்டும் கண்மாயில்/ ஏரியில் ஆண்டுதோறும் கிடைக்கும் பாசி விலையைக் கொண்டும் வாய்க்கால்களும், கண்மாய்களும் பழுது பார்க்கப்பட்டதைப் பாண்டிய நாட்டுக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

நம்முன்னோர்களின் வழியில் கண்மாய்/ஏரிப் பாசன சங்கங்கள் அமைத்து நீர் மேலாண்மைக்குச் சட்டங்கள் இயற்றியும் கண்மாய்/ஏரிகளைப் செப்பனிட்டு பாதுகாத்து வருவோமாக.

முனைவர்: ச.மா. இரத்னவேல்

மூலம்: வெ. வேதாச்சலம் எழுதிய 'பராக்கிரம பாண்டியபுரம்' நூல்

பாசன நீர்ப்பங்கீடு: கிராமசபையின் ஆணை

Text

1. . . . . II - **கொச்சடையமாற (ர்*)**க்கு யாண்டு 46 இ(வ்*)வாண்டு அழநாட்டு . . . . நல்லூர் (ர்*) ஸஹெயொம் நம்மூர் ஸ்ரீகண்டவாய்-
2. க்கால் கீழ்ஹூமி முந்நீடாய் குறுவைய் விளெய்ந்த . . . . . க்கள் எல்லதுளைப்பார் மா காசு தண்டமும் பட்டு பிந்நெ
3. யும் விளெக்க(ப்) பெறாதிதாகவும் (I *) இவ்வாய்க்கால்க் கீழ் . . . . . ல் வெட்டின ை கவர் திறப்பதாகவும் (I *) இப்பரிச(ல்)லது செய்
4. வார் உண்ட(ப்*)படுவதாகவும் (I *) இப்பரிசு கெச்சம் செய்தொம் ஸஹெயொம்-

பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனின் 46ம் ஆட்சி ஆண்டில், அழநாட்டின் அரிகேசரி பிரமதேய கிராமத்தில் ஸ்ரீகண்ட வாய்க்காலில் வந்த நீரை ஒழுங்குபடுத்தி நிலங்களுக்கு இவ்வூர் சபையார்விட்டனர். இவ்வொழுங்குமுறையோடு கிராம சபையினரின் ஆணையும் (கைச்சம்) பொறிந்திருந்த கல் ஒன்று ஸ்ரீகண்ட வாய்க்காலுக்கு அருகில் இச்சபையாரால் நாட்டப்பெற்றது. இவ்வொழுங்கு முறை தவறியவர்கள் கோயிலில் விளக்கெரிக்கும் தகுதியிழந்தவர்கள் என்றும் தண்டனைக்குரியவர்கள் என்றும் சின்னமனூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டில், தற்பொழுது "வாரபந்தி" என்று அழைக்கப்படுகின்ற முறை போல், நிலங்களுக்கு நீர் வழங்கும் முறை வழக்கில் இருந்தது தெரிய வருகிறது.

தொகுப்பு : முனைவர் வெ. வேதாச்சலம்

கிணறுகள் (Conjunctive Use)

நிலங்களுக்குப் பாசனமளிக்கக் கிணறுகளும் வயல்களுக்கிடையே தோண்டப் பெற்றிருக்கின்றன. தனியார் கிணறு தோண்ட விரும்பினால் ஊர் சபையாரிடம் அனுமதி பெற வேண்டுமென்றும், ஊராய் இருந்தால் அரசனிடமிருந்து அனுமதி பெறவேண்டும் என்றும் விதிமுறை தமிழகத்தில் அக்காலத்து இருந்தது. கல்வெட்டுகளில் நிலங்களுக்கு எல்லை குறிப்பிடும் போது கிணறுகள் தவறாமல் குறிப்பிடப்பட்டுள்ளன.

தளவாய்புரம் செப்பேடு எப்போதும் நீர்ததும்ப நின்ற கண்ணங்கீரன் வயக்கல் கிணறு, சோமாசி வயக்கல்கிணறு, நற்சிங்க குளவளால் என்ற மூன்று கிணறுகளால் விளைந்த வயல்கள் அனைத்தையும் பாண்டியன் பராந்தக வீரநாராயணன் செப்பேட்டின் தமிழ் வாசகத்தைப் பாடியவனுக்கும், சிற்பத்திறன் கொண்ட மார்த்தாண்டன் என்பவனுக்கும் இறையிலியாக அளித்தான் என்று தெரிவிக்கின்றது. செப்பேட்டின் வாசகத்தை (பிரசஸ்தி) பாடின சிரிமாதவன் ஸ்ரீசரணசேகரனுக்கும், மகாவிளால், பெருவிளால் என்ற இரண்டு கிணறுகளால் நீர் பெற்று விளைந்த நிலத்தைத் தானமாக தந்தான் என்று தெரிவிக்கின்றது.

“குளந்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்து
உளந்தொட்டு உழுவயலாக்கி வளந்தொட்டு
பாகுபடுங் கிணற்றேடென்றில் வைம் பாற்படுத்தான்
ஏகுஞ் சுவர்க்கத் தினிது”.

சிறு பஞ்சமூலம் 64.

மேலேகூறிய சங்கம் மருவிய காலப்பாடலில் ஏரியின்கீழ் பொதுக்கிணறு அமைத்தலும் முக்கியமாக கருதப்பட்டுள்ளது என்பது இன்றைய காலத்தில் Conjunctive Use என்று கூறப்படுவதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறைப்படுத்தியிருந்ததை அறியலாம். மேலும் பொதுக்கிணறுகளும், தனியாருக்குச் சொந்தமான கிணறுகளும் அப்போது இருந்தன.

தொகுப்பு: ச.மா. இரத்னவேல்
மூலம்: வெ. வேதாசலம் எழுதிய பாண்டிய நாட்டில் நீர்ப்பாசனப் பணிகள்

தானம் அறக்கட்டளை
18, பிள்ளையார் கோவில் தெரு,
சோமசுந்தரம் காலனி, மதுரை – 625 010
தொலைபேசி: 0452 – 2610794, 2610805
தொலைநகல்: 0452 – 2602247
மின் அஞ்சல்: dhan@md3.vsnl.net.in